V11Bio

விருதுநகர் மாவட்டம்

முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - ஜனவரி 2025

-----

வகுப்பு 11

கால அளவு: 3.00 மணிநேரம் **உயிரியல்** மொத்த மதிப்பெண்கள்: 70

**பகுதி - I (உயிரி - தாவரவியல்)** **மதிப்பெண்கள்: 35**

பிரிவு - I

குறிப்பு: **1. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **8×1=8**

**2. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து உரிய குறியீட்டுடன் சேர்த்து எழுதவும்.**

1) **சரியான கூற்றுகளை கண்டறியவும்:**
   i) ஸ்ட்ரோமட்டோலைட்கள், ஆர்க்கிபாக்டீரியங்களுடன் தொடர்புடையது.
   ii) விராய்டுகள், புரத உறையற்ற வட்டவடிவமான ஓரிழை க்களாகும்.
   iii) கேண்டிடியாசிஸ் ஒரு பாக்டீரிய நோயாகும்.
   iv) லைக்கன்கள் மாசு சுட்டிக்காட்டிகளாக கருதப்படுகின்றன.
   அ) i, iv ஆ) ii, iii இ) ii, iv ஈ) i, iii

2) **சரியான இணையைத் தேர்ந்தெடு:**
   **ஆல்கா - பசுங்கணிக வடிவம்**
   அ) ஸ்பைரோகைரா - நட்சத்திரம்
   ஆ) சைக்னிமா - சுருள்
   இ) கேரா - கிண்ணம்
   ஈ) ஊடோகோணியம் - வலைப்பின்னல்

3) கீழ்கண்டவற்றுள் பல்காய்ப்புத் தாவரம் எது?
   அ) மியுசா ஆ) அகேவ் இ) பாம்புசா ஈ) மாஞ்சிஃபெரா

4) ஒரு மஞ்சரியில் மலர்கள் பக்கவாட்டில் அடி முதல் நுனி நோக்கிய வரிசையில் அமைந்திருந்தால், இளம் மொட்டு
   அ) இடைசெருகப்பட்டிருக்கும் ஆ) அண்மையிலிருக்கும்
   இ) சேய்மையிலிருக்கும் ஈ) எங்குமிருக்கும்

5) இருபக்க சமச்சீர் கொண்ட மலர்கள்
   அ) சீரோஃபிஜியா ஆ) டாட்டுரா இ) சொலானம் ஈ) தெவிஷியா

6) குரோமோசோமின் எப்பகுதியின் ஆய்வு வயதாதல், புற்றுநோய் பற்றிய புதிய புரிதலுக்கு வழிவகுக்கும்?
   அ) முதன்நிலை இறுக்கம் ஆ) டீலோமியர்
   இ) சாட்டிலைட் ஈ) இரண்டாம் நிலை இறுக்கம்

7) மனித செல் பிரிதலில் APC பிழையானால் கீழ்கண்டவற்றுள் எது நிகழும்?
   அ) குரோமோசோம்கள் குறுக்கம் அடையாது.
   ஆ) குரோமோசோம்கள் பிரிவுறாது.
   இ) குரோமோசோம்கள் துண்டாக்கப்படுதல்.
   ஈ) குரோமோசோம்களில் மீள்சேர்க்கை நிகழும்.

8) செல்லுலோஸில் உள்ள β-D குளுக்கோஸ் அலகுகள் ........... பிணைப்பால் இணைக்கப்பட்டுள்ளது.
   அ) β - (1, 4) கிளைக்காசைடிக் பிணைப்பு ஆ) 1→3 பிணைப்பு
   இ) N-அசிட்டைல் பக்க சங்கிலிகள் ஈ) N- அசிட்டைல் குளுக்கோசமைன்

பிரிவு - II

**ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **4×2=8**

9) வேறுபடுத்து: உண்மை வித்தகம் மற்றும் மெலி வித்தகம்
10) தொற்றுவோர்கள் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தரவும்.
11) மெய்சைம் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தரவும்.
12) இருவிதையிலைகளையும் கோப்பை வடிவ பூத்தளத்தையும் கொண்ட தாவரங்களை எவ்வாறு வகைப்படுத்துவாய்?
13) புரோட்டோபிளாச கோட்பாட்டைக் கூறுக.
14) சென்ட்ரோமியர் அமைவிடத்தின் அடிப்படையில் குரோமோசோமை வகைப்படுத்தவும்.

பிரிவு - III

**ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **3×3=9**
**(வினா எண் 19-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)**

15) குரோமிஸ்டா பெரும்பிரிவைப் பற்றி குறிப்பெழுதவும்.
16) வேரின் பகுதிகளை படம் வரைந்து பாகம் குறிக்கவும்.
17) ஆசிரியர் பெயர் சுட்டம் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தரவும்.
18) வேறுபடுத்து: சொரசொரப்பான எண்டோபிளாச வலைப்பின்னல் மற்றும் வழவழுப்பான எண்டோபிளாச வலைப்பின்னல்.
19) நீரின் பண்புகளை எழுதுக.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பிரிவு - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** 2×5=10

20) அ) வேறுபடுத்து : ஜிம்னோஸ்பெர்ம்கள் மற்றும் ஆஞ்சியோஸ்பெர்ம்கள் **(அல்லது)**

ஆ) ஃபேபேசி குடும்பத்தின் ஏதேனும் ஐந்து பொருளாதார முக்கியத்துவத்தை எழுதுக.

21) அ) பாலிடீன் குரோமோசோம் அமைப்பை படம் வரைந்து விளக்கவும். **(அல்லது)**

ஆ) RNAவின் வகைகளை விவரி.

## பகுதி - II (உயிரி - விலங்கியல்) மதிப்பெண்கள்: 35

### பகுதி - 1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 8×1=8

1) பல்லுயிர் தன்மை என்ற பதத்தை சூட்டியவர் யார்?
அ) வால்டர் ரோஸன் ஆ) அரிஸ்டாட்டில்
இ) ஏஜி டான்ஸ்லே ஈ) எபி.டி.காண்டோல்

2) கரப்பான்பூச்சியின் சுவாச நிறமி
அ) ஹீமோகுளோபின் ஆ) ஹீமோசயனின்
இ) ஹீமோஎரித்ரின் ஈ) மேற்கண்ட எதுவும் இல்லை

3) லாக்குனே எனப்படும் குழிகளில் காணப்படும் எலும்பு செல்கள்
அ) நியூரோகிளியா செல் ஆ) ஆஸ்டியோசைட்
இ) லிம்போசைட் ஈ) மோனோசைட்

4) கரப்பான்பூச்சியில் காணப்படும் கழிவுநீக்க சுரப்பி
அ) கான்குளோபேட் சுரப்பி ஆ) காளான் வடிவ சுரப்பி
இ) மால்பீஜியன் சுரப்பி ஈ) யூரிகோஸ் சுரப்பி

5) கீழ்வருவனவற்றுள் எந்த இணை தவறானது?
அ) பெப்சின் - இரைப்பை
ஆ) ரெனின் - கல்லீரல்
இ) ட்ரிப்சின் - சிறுகுடல்
ஈ) டயலின் - வாய்க்குழி

6) ஆக்சிஜன் பிரிகை நிலை வளைவின் வடிவமானது
அ) சிக்மாய்டு ஆ) நேர்க்கோடு இ) வளைந்தது ஈ) நீள்சதுர மிக வளைவு

7) ரத்தம் உறைதலில் பங்கேற்காதது எது?
அ) கால்சியம் ஆ) ரத்தத் தட்டுகள் இ) பிலிரூபின் ஈ) ஃபைப்ரின்

8) போடோசைட்டுகள் காணப்படுவது
அ) கிளாமருலார் ரத்த நுண் நாளங்களின் சுவரில்
ஆ) நெஃப்ரானின் கழுத்து பகுதியில்
இ) பௌமானின் கிண்ண உட்சுவரில்
ஈ) பௌமானின் கிண்ண வெளிச்சுவரில்

### பகுதி - 2

**ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்:** 4×2=8

9) பயன் தரும் பாக்டீரியாவை நோயூக்கி பாக்டீரியாவில் இருந்து வேறுபடுத்துக.
10) எலும்பு மீன்களின் மூன்று முக்கிய பண்புகளை குறிப்பிடுக.
11) இரத்தம் ஏன் தனித்துவமான இணைப்பு திசு என்று அழைக்கப்படுகிறது?
12) மெட் ஹீமோகுளோபின் விளக்கம் தருக.
13) அனாஸ்டோமோசஸ் என்றால் என்ன?
14) சிறுநீரகப் பணிகளை நெறிப்படுத்தும் இரண்டு ஹார்மோன்களை எழுதுக.

### பகுதி - 3

**ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்: வினா எண் 19 கட்டாய வினா.** 3×3=9

15) ஃபெலிடே குடும்பத்தின் மூன்று முக்கிய பண்புகளை எழுதுக.
16) சிலவகை எபிதீலியங்கள் பொய்யடுக்கினால் ஆனவை. இதன் பொருள் என்ன?
17) வாய் வழி நீரேற்றச் சிகிச்சை என்றால் என்ன?
18) நிமோனியா ஏன் ஆபத்தான நோயாக கருதப்படுகிறது?
19) இதய நுரையீரல் உயிர்ப்பித்தல் என்றால் என்ன?

### பகுதி - 4

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** 2×5=10

20) அ) கணுக்காலிகளின் பண்புகளை எழுதுக.

**(அல்லது)**

ஆ) ஆண் மற்றும் பெண் கரப்பான்பூச்சியை வேறுபடுத்துக.

21) அ) இதயத்துடிப்பு தோன்றல் மற்றும் கட்டுப்படுத்துதல் நடைபெறும் முறையை விவரி.

**(அல்லது)**

ஆ) சிறுநீரகப் பணிகளை நெறிப்படுத்தும் ஹார்மோனை சுரப்பதில் இதயத்தின் பங்கை விளக்குக. அந்த ஹார்மோன் பெயர் என்ன?

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com